# கல்வி அமைச்சு

## திறன் அபிவிருத்தி, தொழிற் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கல் பிரிவு

## இலங்கை — ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம்

# வெற்றிடங்கள்

**பணிப்பாளர் - அதிபர் - (HM 2-1)**

கல்வி அமைச்சின் திறன் அபிவிருத்தி, தொழிற் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கல் பிரிவின் கீழ் உள்ள இலங்கை - ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தினால் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிகளுக்கு நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்:**

**வெளிவாரி:**

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் மோட்டார் பொறிமுறை/ இயந்திரவியல்/ மின்சாரப் பொறியியலாளர் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

மற்றும்

பொறியியல் துறையில் பட்டப் பின்படிப்பு (Masters') பட்டம் அல்லது கூட்டுத்தாபனம், சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனமொன்றில் தொடர்புடைய ஏனைய ஏதாவது துறையில் முகாமைத்துவ மட்டத்தில் 18 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல் என்பதுடன் இதில் 05 வருட காலம் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் தொடர்புடைய பாடங்களைக் கற்பித்தல், மாணவர்களைக் கையாள்தல் மற்றும் பயிற்சியளிப்பதில் நிரூபிக்கப்பட்ட சாதனைப் பதிவைக் கொண்டிருத்தல் மற்றும் தொடர்புடைய கைத்தொழில் துறையில் அனுபவம்.

அல்லது

(ஆ) பொறியியல் துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றில் கோப்பரேட் அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்.

மற்றும்

குறைந்தபட்சம் 18 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல் என்பதுடன் இதில் 05 வருட காலம் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் தொடர்புடைய பாடங்களைக் கற்பித்தல், மாணவர்களைக் கையாள்தல் மற்றும் பயிற்சியளிப்பதில் நிரூபிக்கப்பட்ட சாதனைப் பதிவைக் கொண்டிருத்தல் மற்றும் தொடர்புடைய கைத்தொழில் துறையில் அனுபவம்.

**உள்வாரி:**

சிரேஷ்ட முகாமைத்துவ சேவை வகுதியில் பிரதிப் பணிப்பாளர்/ பிரதி அதிபர் பதவியொன்றில் குறைந்தபட்சம் மூன்று (03) வருட கால திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்

| | | |
|---|---|---|
| **சம்பள அளவு** | : | முகாமைத்துவச் சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம், **HM 2-1** – ரூபா 91,645 - 2700x12 - 124,045/- (இதற்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் உரித்தாகும்) |
| **ஆட்சேர்க்கப்படும் முறை** | : | கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம் |
| **வயதெல்லை** | : | விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளில் 45 வயதிற்குக் குறையாமலும் 57 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல. |

**ஏனைய நன்மைகள் :**

- அரசாங்கச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் உத்தியோகபூர்வ போக்குவரத்து வசதிகள் வழங்கப்படும்.
- ஊழியர்கள் தமது சம்பளத்தில் 8% தொகையை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும் என்பதுடன் 12% நிறுவனத்தினால் பங்களிப்புச் செய்யப்படும் என்பதுடன் 3% ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்குப் பங்களிப்புச் செய்யும்.

**பொது நிபந்தனைகள் :**

- சகல விண்ணப்பதாரர்களும் இலங்கைப் பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.
- உள மற்றும் உடல் ரீதியாக நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றும் தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.
- மேற்கூறப்பட்ட பதவிகளுக்கு ஆட்சேர்க்கப்படும் வெளிவாரி விண்ணப்பதாரிகள் 03 வருட தகுதிகாண் காலத்தைப் பூர்த்தி செய்தல் வேண்டும். அவர்/ அவள் அந்தக் காலப்பகுதியின் இறுதியில் காட்டும் திருப்திகரமான வினைத்திறன் மற்றும் நடத்தையின் பிரகாரம் பதவியில் நிரந்தரமாக்கப்படுவார். தற்போது பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள உள்வாரி விண்ணப்பதாரர்கள் 01 வருட கால பதில் கடமை காலத்திற்கு உட்படுத்தப்படுவர்.
- மேற்கூறிய பதவிகளுக்கு ஆட்சேர்த்தல் இயைபுடைய பதவிகளின் ஆரம்ப சம்பள நிலையிலாகும்.

விண்ணப்பதாரர்கள் பின்வரும் ஆவணங்களின் புகைப்படப் பிரதியை சுய விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

(அ) பிறப்பத்தாட்சிப் பத்திரம்
(ஆ) கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளை உறுதி செய்வதற்கான சான்றிதழ்
(இ) சேவை அனுபவம் தொடர்பான சான்றிதழ்
(ஈ) தேசிய அடையாள அட்டை

தற்போது அரசாங்க கூட்டுத்தாபனம், நியாயாதிக்க சபை மற்றும் திணைக்களங்களில் சேவையாற்றுபவர்கள் தமது நிறுவனத் தலைவரின் ஊடாக விண்ணப்பப் படிவங்களை அனுப்புதல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவள்/அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும் என நிறுவனத் தலைவரினால் உறுதிப்படுத்துதல் வேண்டும். உறவினரல்லாத உங்களைப் பற்றி விசாரிக்கக்கூடிய இருவரின் முழுமையான விபரங்கள் சகிதமான விண்ணப்பங்களை தங்களாலேயே சான்றுபடுத்திய சான்றிதழ்களுடன் 2024-09-17ஆம் திகதிக்கு முன் செயலாளர், கல்வி அமைச்சு, திறன் அபிவிருத்தி, தொழிற் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கல் பிரிவு, இல. 354/2, ''நிபுனதா பியச'', எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு-05 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். முழுமையற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். குறும்பட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரர்கள் மட்டும் நேர்முகத் தேர்விற்காக அழைக்கப்படுவர். இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப் படிவங்கள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

ஆட்சேர்ப்பதற்கு எந்த விதத்திலாவது ஆதரவு தேடுதல் ஆட்சேர்ப்பதற்கான தகைமையீனமாகலாம்.

**செயலாளர்,**
**கல்வி அமைச்சு,**
**திறன் அபிவிருத்தி, தொழிற் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கல் பிரிவு,**
**இல. 354/2, ''நிபுனதா பியச'',**
**எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு-05**